# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ரிழ்வானிய்யா அரபுக் கல்லூரி
## (கூட்டிணைத்தல்)

**ரிழ்வானிய்யா அரபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். எஸ். தௌபீக் அவர்களால் 2013, திசெம்பர் மாதம் 19 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2013, திசெம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ 279 ஆம் சட்டமூலம் ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## ரிழ்வானிய்யா அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்)

## ரிழ்வானிய்யா அரபுக் கல்லூரியினைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*முன்னுரை.*

"ரிழ்வானிய்யா அரபுக் கல்லூரி" என அழைக்கப்படும் அரபுக் கல்லூரி, சொல்லப்பட்ட ரிழ்வானிய்யா அரபுக் கல்லூரியுடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் அதன் முகாமைச் சபையினால் உடன்பட்டுக் கொள்ளப்படட விதிகளுக்கிணங்க பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக இலங்கையில் கொழும்பு மாவட்டத்தில் இலக்கம் 84, கியூ றோட், கொழும்பு - 02 என்னுமிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட அரபுக் கல்லூரி எந்தப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்துடன் அவ்விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, ரிழ்வானிய்யா அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*ரிழ்வானிய்யா அரபுக் கல்லூரியைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன் பின்னரும் ரிழ்வானிய்யா அரபுக் கல்லூரியின் (இதனகத்துப்பின்னர் "கல்லூரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களும் அத்துடன் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகைய எண்ணிக்கையான ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு

2-PL 007857 -45 (2013/12)

செய்யப்படும்) ''ரிழ்வானிய்யா அரபுக் கல்லூரி'' என்ற பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப் பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும் என்பதோடு, அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றியமைக்கவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத் தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. அரபுக் கல்லூரி அமைக்கப்படுவதற்கான குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத் தப்படுகின்றது :-

(அ) சமுதாயத்தை இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தின் அடிப்படையில் வழிநடத்தக்கூடிய ஆலிம்களை உருவாக்குதல் ;

(ஆ) இஸ்லாத்தைப் பேணிப் பாதுகாத்தல் ;

(இ) அல்குர்ஆனை மனனம் செய்தவர்களான ஹாபிழ்களை உருவாக்குதல் ;

(ஈ) இஸ்லாமிய சமூகத்தினரிடையே ஒற்றுமையை வளர்த் தலும் மேம்படுத்தலும் மற்றும் அத்தகைய சமூகத்தின ரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதலும் ;

(உ) ''சுன்னத் வல் ஜமாஅத்'' கொள்கையை இஸ்லாமிய சமூகத்தினரிடையே மேம்படுத்துதல் ;

(ஊ) திருக்குர்ஆன் ஹதீஸ் என்பற்றிற்கிணங்க அரபு மொழி மூலம் இஸ்லாத்தைக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் ஊக்கு வித்தல் ;

(எ) சிங்களம், தமிழ், ஆங்கிலம், உருது ஆகிய மொழிகளை கற்பித்தல் ;

(ஏ) இலங்கைக் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் இஸ்லாத்தைப் படிப்பதற்கு மாணவ, மாணவியருக்கு சந்தர்ப்பத்தை அளிப்பதுடன் அவர்களை கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண, உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்று வதற்குத் தயாராக்குதல் ;

(ஐ) முஸ்லிம சமூகத்தின் சமுதாய பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றம் கருதி தனியான பிரிவொன்றை ஏற்படுத்திக் கொண்டு நடாத்துதல் ;

(ஒ) "ஷாபிஈ மத்ஹப்" என்ற "பிக்ஹ்" சட்டத்தையும் (சட்டக் கோட்பாடுகள்), ''அல் அஷ் அரிய்யா'' நம்பிக்கை கோட்பாட்டையும், புனித தஸவ்வுத் தப்லீஃகையும் அடிப் படையாகக் கொண்ட ''சுன்னத் வல் ஜமாஅத்'' கொள்கையை மேம்படுத்தலும் ஊக்குவித்தலும் ; அத்துடன்

(ஓ) மேற்படி ஏதேனும் குறிக்கோளுடன் தொடர்புபட்டதும் மற்றும் கல்லூரியின் வளர்ச்சிக்கு நன்மை பயக்கின்ற தெனவும் கூட்டுத்தாபனம் அபிப்பிராயப்படுகின்ற அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் முகாமைச் சபை.

**4.** (1) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் நிருவாகம், கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் என்பன இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சமூகத்தவர்களிடையேயும் உலமாக்களிடையேயுமிருந் தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தலைவர், உபதலைவர்கள் இருவர், இனைச் செயலாளர்கள் இருவர், பொருளாளர், உதவிப் பொருளாளர் மற்றும் எட்டு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் உட்பட பதினைந்து பேர்களைக் கொண்ட முகாமைச் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். இணைச் செயலாளர்களில் ஒருவர் கல்லூரியில் கடமை புரியும் ஆசிரியராக இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முன்னரான நாளன்று பதவி வகிக்கின்றதான கல்லூரியின் முகாமைச் சபையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அச்சபையானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கப் புதிய முகாமைச் சபையொன்று தெரிவு செய்யப்படும் வரையில் பதவியில் இருத்தலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்கள் ஒரு வருட காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்குத் தகவுடையோராக இருத்தலும் வேண்டும்.

*நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான தகைமைகள்.*

**5**. நிர்வாகக் குழு உறுப்பினரொருவர் -

(அ) இஸ்லாமிய ஸரீஅத் சட்டத்தின் எல்லைகளுக்குள்ளாக வாழ்பவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) நல ஒழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், இஸ்லாமிய சமூகத்தால் நன்கு மதிக்கப் படும் ஒருவராகவும் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) ஷரீஅத் சட்டங்களையும் உலமாக்களையும் மதித்து நடப்பவராக இருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**6**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும், இத்தத்துவங்களுள் வங்கி கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணத்தைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும்

சேகரிக்கவும், கூட்டுத்தாபனத்தின் நிதிகளை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையில் ஈடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல் மற்றும் வேலை நீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** *(1)* கூட்டுத்தாபனமானது காலத்திற்குக் காலம், ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரின் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் ஒவ்வாதனவாக விராத விதிகளைப் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் ஏதேனும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குவது கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களை அனுமதித்தல், அவர்களின் பதவி விலகல் மற்றும் அவர்களையும் பதவியிலிருந்து நீக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் ;

(இ) முகாமைச் சபையினதும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் பதவி தாங்குநர்களினதும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(ஈ) முகாமைச்சபையின் கூட்டங்கள் நடாத்துல் மற்றும் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் மற்றும் அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் வேலையாட்களை நியமித்தல் மற்றும் அவர்களின் கடமைகள், பணிகள் மற்றும் அத்தகைய வேலையாட்களினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுக்க நெறிக்கோவை ;

(ஊ) அத்தகைய விதிகள் தேசிய அல்லது மாகாணக் கல்விக் கொள்கையுடன் முரணாக இருக்காத அளவுக்கு, நடாத்தப்பட வேண்டிய கற்கை நெறிகள், கல்விப் பாட விதானங்கள், பரீட்சைகள் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை நிருவகித்தலும் முகாமை செய்தலும் மற்றும் அதன் நிதிகளின் கட்டுக் காப்பும் ; அத்துடன்

(ஏ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதிலும் மற்றும் அதன் குறிக்கோள் களை எய்துவதற்கும் தேவையான கருமங்கள் ;

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தவர்களாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது (1)ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதைப் போன்ற அதேமுறையில் மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

*கல்லூரிக்குச் செலுத்தப்பட வேண்டியவையும் மற்றும் செலுத்தப்படற்பாலனவாகவுமுள்ள தனிசுகள்.*

**8**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று கல்லூரிக்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று கல்லூரிக்கு செலுத்தப்படற் பாலனவாகவுமுள்ள எல்லாத் தனிசுகளும் சந்தாப்பணங்களும் மற்றும் ஒப்பப்பணங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைச் சபையால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தானதுமான எச்சாசனத்திலும் பொறிக்கப்படுதலாகாது. அத்துடன் அவர்கள் தாம்

சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனுமாள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்.

(2) கூட்டுத்தாபனமானது கூட்டுத்தாபனத்தின் எல்லா வரவு செலவுகளினதும், சொத்துக்கள் பொறுப்புக்களினதும் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் சரியான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் ''தகைமை பெற்ற கணக்காய்வாளர்'' என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளவரும் அத்தகைய நிறுவகத்தின் சபையினால் வழங்கப்பட்ட தொழில்புரிவதற்கான தகைமைச் சான்றிதழை வைத்திருப்பவருமாகிய தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) அதன் வதிவிடப் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்றவர்களும் மற்றும் அத்தகைய நிறுவகத்தின் சபையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிதழொன்றைக் கொண்டிருக்கின்றவர்களுமான, பங்காளர்களைக் கொண்ட கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை வைத்திருக் கலாம்.*

**11.** கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, சந்தாப் பணம், நன்கொடை, மானியக்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறேதேனும் விதமாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதாவது அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை இந்தச் சட்டத் தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்தின் தற்போதைக்கு வலு விலுள்ள விதிகளுக்கமையப் பெறுவதற்கும், வைத்திருப்பதற்கும் சட்டத்தில் இயலுமாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென் பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களையும் விற்பதற்கும், ஈடுவைப்பதற்கும், குத்தகைக்கு கொடுக்கவும், பரிமாறிக்கொள் ளவும்,வேறுவகையில் கையுதிர்ப்பதற்கும் ஆன முழுத்தத்துவத் தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள சொத்து.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் கடன்கள், பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதாவது சொத்து எஞ்சியிருந்தால் அத்தகைய சொத்து கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் அது, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் பிற நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றிற்கு, அந்நிறுவனத்தின் அல்லது அந்நிறுவனங்களின் உறுப்பினர்கிடையே ஏதாவது வரு மானத்தை அல்லது சொத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்

*குடியரசினதும் ஏனையோர் களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இலங்கைக் குடியர சின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டி ணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்து தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்